## எனது தாத்தாவின் ஜெபம்…..

எனது தாத்தா (அம்மாவின் அப்பா) எனது பெற்றோருடன் ஆதரவாக இருந்து, எங்களை வளர்க்க மிகவும் பிரயாசப்பட்டவர். இவர் தையல் தொழிலில் அனுபவமிக்கவர். தனது இறுதி நாட்கள்வரை தொழில் செய்தவர்.
நாங்கள் சேர்ந்து அமர்ந்து உணவு உண்ணும்பொழுதெல்லாம், அவர் ஒரு ஜெபம் செய்வார்.
அவர் மனதுக்குள்ளே ஜெபம் செய்வார். அவர் ஜெபம் செய்தபிறகு நாங்கள் உண்பது வழக்கம்.
நான் என்ன ஜெபம் செய்கிறார் என்பதை ஒருநாளும் கேட்டதில்லை. அவரும் சொன்னதில்லை.

இந்த நல்ல பழக்கத்தை ஏன் எங்களுக்கு அவர் சொல்லவில்லை என்பது ஆச்சரியமாகவுள்ளது.
இந்த பழக்கத்தை அவராக செய்தாரா அல்லது அவருடைய அப்பா சொல்லித்தந்தாரா என்பதும் தெரியவில்லை. அவருடைய அப்பா மூலம் வந்திருந்தால், எங்களுக்கு சொல்லியிருந்திருப்பார்…
இந்த நல்ல பழக்கத்தின் விவரம் தெரியாமலே போய்விட்டது.

நமது முன்னோர்கள் பலர் கடவுள் கொடுத்த ஞானத்தினாலே பல விவரங்களைப் பெற்றிருந்தார்கள். எனது தாத்தாவும் இந்த நல்ல ஜெபத்தின் ஞானத்தைப் பெற்றிருந்தார்.
அதை எங்களோடு பகிர்ந்துகொள்ளாமல் போய்விட்டார். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.
**இது பற்றி சிந்தித்துப் பாருங்கள்………**

நம்மிடம் உள்ள வேதாகமத்தின் மூலம் கடவுளையும் ஆன்மீக வாழ்க்கையின் விளக்கத்தையும் அறிந்து கொள்ள நல்ல வாய்ப்புள்ளது.
வேதாகமத்திலிருந்து ஒரு சில வசனங்களை வாசிப்போம்.:

வேதாகமம்: புதிய ஏற்பாடு: மத்தேயு 6:9-13
நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது:
பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்,
ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

இந்த அதிகாரத்தை முழுமையாக வாசித்தால், நம்முடைய வாழ்க்கை சூழ்நிலைகள் மிகவும் அருமையாக கடவுளால் விளக்கப்பட்டிருப்பதை அறியலாம்.
தயவுசெய்து இதை ஒரு கிறிஸ்தவ புத்தகமாக பார்க்காதீர்கள்.
தயவுசெய்து இதை ஒரு மத புத்தகமாகவும் பார்க்காதீர்கள்.
இந்த புத்தகம், நம் ஒவ்வொருவரும் தினமும் மீண்டும் மீண்டும் நம் வாழ்நாள் முழுவதும் படிக்கவும், சிந்திக்கவும், தியானிக்கவும் வேண்டியது அவசியம்.
நீங்கள் இதுவரை படிக்கவில்லையென்றால், தயவுசெய்து முயற்சி செய்யுங்கள்.
ஆண்டவர் உங்களுக்கு உதவிசெய்வார்.

நாம் இப்பொழுது ஜெபம் செய்வோம்.